# கோகுல்ராஜ் வழக்கில் வாதாடிய வழக்கறிஞருக்கு பாராட்டு விழா

ஈரோடு, மார்ச் 19: திருச்செங்கோடு கோகுல்ராஜ் ஆணவ படுகொலை வழக்கில் வாதாடி தீர்ப்பை பெற்றுத் தந்த மூத்த வழக்கறிஞர் மோகனுக்கு நேற்று ஈரோட்டில் பாராட்டு விழா நடைபெற்றது. தமிழ்நாடு மக்கள் உரிமை பேரவை ஒருங்கிணைப்பாளர் கண.குறிஞ்சி தலைமை வகித்தார். திராவிடர் விடுதலை கழக மாநில அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி வரவேற்றார்.



▶ கோகுல்ராஜ் ஆணவ படுகொலை வழக்கில் வாதாடி தீர்ப்பை பெற்றுத் தந்த மூத்த வழக்கறிஞர் மோகனுக்கு நேற்று ஈரோட்டில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில், மூத்த வழக்கறிஞர் திருமலைராஜன், மனித உரிமை செயற்பாட்டாளர் ஹென்றி திபேன், திராவிடர் விடுதலை கழக தலைவர் கொளத்தூர் மணி, ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான், தற்சார்பு விவசாயிகள் சங்க தலைவர் பொன்னையன், இந்திய கம்யூ., மாநில கட்டுப்பாட்டு குழு நிர்வாகி குணசேகரன், மார்க்சிஸ்ட் கம்யூ., மாவட்டச் செயலாளர் ரகுராமன் உள்ளிட்டோர் பாராட்டு உரையாற்றினர். மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன் ஏற்புரையாற்றினார். இதில் பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பினர், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.